# நதிகள் இணைப்பின் முன்னோடி

# காலிங்கராயன்



தினமணி
கோவை பதிப்பின் 25

நதிகள் இணைப்பு தொடர்பாக 21-ஆம் நூற்றாண்டில் வாய்மொழியாக பேசிக் கொண்டிருக்கிறோம். ஆனால், 740 ஆண்டுகளுக்கு முன்பே அதைச் செயல்படுத்தி முன்னோடியாகத் திகழ்ந்தவர் ஈரோடு மாவட்டத்தில் வாழ்ந்த குறுநில மன்னர் காலிங்காரயன்.

ஈரோடு மாவட்டத்தில் காலிங்கராயன் கால்வாயைக் கட்டிய பெருமை லிங்கையன் (எ) காலிங்கராயனையே சாரும். காலிங்கராயன் பாண்டிய நாட்டுத் தலைவர் ஆன பிறகு, தன் ஆளுகைக்கு உள்பட்ட புன்செய் நிலங்களை நன்செய் நிலங்களாக மாற்ற வேண்டும் என்று திட்டமிட்டு நாட்டு மக்களின் உதவியுடன் காலிங்கராயன் அணையைக் கட்டி கால்வாயையும் வெட்டினார் என்பது வரலாறு.

காவிரி ஆற்றின் கிளை நதிகளான பவானியையும், நொய்யலையும் இணைக்கும் கால்வாய் காலிங்கராயன் கால்வாய். இதன் மூலம் பவானி ஆற்றிலிருந்து நீர் பிரித்தெடுக்கப்பட்டு காவிரி ஆற்றின் ஓரமாகவே அதன் தென் கரையில் சுமார் 56 மைல்கள் கிழக்காக ஓடி ஆவுடையார் பாறை என்ற இடத்தில் நொய்யல் ஆற்றில் சங்கமமாகிறது.

பவானி ஆற்றை நொய்யல் ஆற்றுடன் இணைக்க 32 மைல் தூரம் கால்வாய் வெட்டினால் போதும் என்ற நிலை இருந்த போதிலும் அதிகமான நிலங்கள் பாசனம் பெற வேண்டும் என்ற நோக்கத்துடனும் நீர் தேங்கி நின்று வயலுக்குப் பாய வேண்டும் என்ற எண்ணத்துடனும் நீரின் வேகத்தைக் குறைத்து கரைக்கு வெள்ளத்தினால் ஏற்படும் அழிவுகள் தடுக்கப்பட வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டும் 56 மைல் தூரத்துக்கு இந்தக் கால்வாய் அமைக்கப்பட்டுள்ளது. கால்வாயின் இரு கரைகளும் காரையால் கட்டப்பட்டு இருப்பதால் காரை வாய்க்கால் என்றும், பாம்பு போல் நெளிந்து செல்வதால் கோணவாய்க்கால் என்றும் இதனை அப்பகுதி மக்கள் அழைக்கின்றனர்.



ஈரோட்டை அடுத்த பவானி அருகே காலிங்கராயன்பாளையத்தில் பவானி ஆற்றின் குறுக்கே 780 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டது காலிங்கராயன் கால்வாய்.

காலிங்கராயன் கால்வாய்க்கும், காவிரி ஆற்றுக்கும் இடையே 20 அடி முதல் 2 மைல் வரை உள்ள இடைப்பட்ட பகுதியில் இந்தக் கால்வாய் அமைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கால்வாயின் மிகப்பெரிய அதிசயமான பாலம் ஒன்று உள்ளது. இந்தக் கால்வாயின் குறுக்கே சுண்ணாம்பு ஓடை கடக்கிறது. அந்த இடத்தில் ஓடைக்கு கீழே பூமிக்கு அடியில் கால்வாய் பாய்ந்து ஓடையைக் கடந்து மீண்டும் வெளியே பாயும் வகையில் இந்தப் பாலம் அமைக்கப்பட்டுள்ளது.

இதுபோன்ற தொழில்நுட்பம் 750 ஆண்டுகளுக்கு முன்பு ஈரோடு மாவட்டத்தில் உருவாக்கப்பட்டது மிகப்பெரிய சிறப்பு அம்சமாக கருதப்படுகிறது. இதுபோன்ற தொழில்நுட்பத்தைப் பார்த்து இன்றைய பொறியாளர்களே வியக்கும் வகையில் இந்த பாலம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

காலிங்கராயன்பாளையத்தில் இருந்து கொடுமுடி அருகே ஆவுடையார்பாறை வரை சுமார் 90 கி.மீ. நீளத்துக்கு பாம்பு போல வளைந்து, நெளிந்து இந்த கால்வாய் செல்கிறது. 786 மதகுகளுடன் கொண்ட இந்தக் கால்வாயில் போக்குவரத்துக்காக 72 பாலங்கள் உள்ளன. இந்தக் கால்வாய் மூலம் 15,743 ஏக்கர் விளை நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. ஈரோடு மக்களின் கோரிக்கையை பேற்று காலிங்கராயனின் சமுதாயப் பணியை போற்றும் வகையில், அணை நாசவம்பாளையம் பகுதியில் சிலை அமைக்கப்படும் என்றும், காலிங்கராயன் அணைக் கட்டுப் பகுதி சுற்றுலாத்தலமாக அமைக்கப்படும் என்றும் முதல்வர் ஜெயலலிதா அறிவித்துள்ளார்.

இக்கால்வாய் அண்மையில் ரூ.100 கோடி நிதி ஒதுக்கப்பட்டு சீரமைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இதுகுறித்து காலிங்கராயன் பாசன சபைத் தலைவர் வி.எம்.வேலாயுதம் கூறியதாவது: சாய, தோல்கழிவு காரணமாக கடந்த 15 ஆண்டுகளில் இப்பகுதி விவசாயிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். ஓர் ஏக்கருக்கு 30 குவிண்டால் விளைந்த மஞ்சள் 17 குவிண்டாலாகவும், ஓர் ஏக்கருக்கு 30 மூட்டைகள் விளைந்த நெல் 20 மூட்டைகளாகவும், கரும்பு 50 டன்னில் இருந்து 35 டன்னாகவும் குறைந்துவிட்டது. இப்போது ரூ.50 கோடியில் கால்வாய் சீரமைக்கப்பட்டுள்ளதால் சாய, தோல் கழிவுநீர் வருவது தடுக்கப்பட்டுள்ளது. அதிகமாக சாயக் கழிவு நீர் கலக்கப்பட்ட இடமான கால்வாயின் 3-ஆவது மைல் 4-ஆவது

பர்லாங்கு முதல் 9-ஆவது மைல் 7-ஆவது பர்லாங்கு வரை இப்போது கான்கிரீட் தளம் அமைக்கப்பட்டுள்ளது. 9-ஆவது மைல் 7-ஆவது பர்லாங்கு முதல் 15-ஆவது மைல் 4-ஆவது பர்லாங்கு வரையும் கான்கிரீட் தளம் அமைக்க வேண்டும். முழுமையாக கான்கிரீட் தளம் அமைத்தால் கடைகோடி வரை எளிதில் தண்ணீர் செல்லும். கான்கிரீட் தளம் அமைத்து எங்களது வாழ்வாதாரத்தை பாதுகாத்த முதல்வர் ஜெயலலிதாவின் நடவடிக்கை பாராட்டுக்குரியது என்றார்.

**முழுமையாக கான்கிரீட் தளம் அமைத்தால் கடைகோடி வரை எளிதில் தண்ணீர் செல்லும். கான்கிரீட் தளம் அமைத்து எங்களது வாழ்வாதாரத்தை பாதுகாத்த முதல்வர் ஜெயலலிதாவின் நடவடிக்கை பாராட்டுக்குரியது**



வி.எம்.வேலாயுதம்

செய்தி: பீ.ஜெபலின் ஜான்
படம் : வே.சக்தி.